(Chapter XXIII Code of Criminal Procedure)

# IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.01/2021 |
| Deposition Of Witness for | : | PW1 |
| Name | : | **Tmt. Latha** |
| Father's/Husband's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **13th February 2024.**

(எதிரி ஆஜர்.. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>முதல் விசாரணை</u>** :

1. நான் இறுதியாக தூத்துக்குடி மாவட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலராக பணிபுரிந்து மே மாதம் 2023 ல் பணிஓய்வு பெற்று விட்டேன். கடந்த 31.08.2018 ம் வருடம் முதல் சிவகங்கை மாவட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலராக பணிபுரிந்து வந்தபோது சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு இயக்குநரக தலைமை அலுவலகத்தில் இருந்து சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 1/2020 என்ற வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி ஜீவா என்ற சாக்கோட்டை வருவாய் ஆய்வாளருக்கு மாண்புமிகு நீதிமன்றத்தில் குற்ற வழக்கு தொடர அனுமதி கேட்டு கடிதம் மற்றும் கோப்பு அனுப்பப்பட்டிருந்தது. அதில் அடங்கி ஆவணங்கள் அனைத்தையும் கவனமுடன் பரிசீலித்தேன். பின்பு புலன் விசாரணை அதிகாரியை 08.03.2021 அன்று வழக்கு ஆவணங்களுடன் அழைத்திருந்தேன். அதன் பின்பு இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை, ஒப்படைப்பு மகஜர், கைப்பற்றுதல் மகஜர், சாட்சிகளின் வாக்குமூலங்கள், எதிரியின் வாக்குமூலம், இதர ஆவணங்களை கேட்டுப் பெற்று கவனமுடன் பரிசீலித்தேன்.

2. **ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் துறையினரால் கொடுக்கப்பட்ட** ஆவணங்கள் மற்றும் சாட்சிகளின் அடிப்படையில் எதிரியின் மீது குற்றவழக்கு தொடர போதுமான முகாந்திரம் இருப்பதாக அறிந்து குற்ற வழக்கு தொடர இசைவாணை வழங்கினேன். **என்னிடம் காட்டப்படும் 09.03.2021 ம் தேதியிட்ட இசைவாணை என்னால் வழங்கப்பட்டது. அது அ.த.சா.ஆ.1** ஆகும். இது தொடர்பாக புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**: வாய்ப்பளித்தும் இல்லை

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Location: Sivagangai
Date: 2024.02.13 16:40:18 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.